# ஒப்புயர்வற்ற ஓவியம்! உயிரனைய தலைவர் கலைஞர்!

நமது ஊணில், உணர்வில், உயிர் துடிப்பில், அணுவளவும் குறையாத அன்பில் நிறைந்த தமிழினத்தலைவர் கலைஞர் அவர்கள் நம்மையெல்லாம் ஆறாத வடுக்களுடன் தவிக்கவிட்டு, மீளாத துயில் கொண்டு, இன்றோடு ஆறு ஆண்டுகள் ஆகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு பிறகு, மாளாத்துயரை மடியில் கட்டியதுபோல் மனதில் சுமந்து நாளும் அவர் நினைவுடன் நாட்களை நகர்த்தும் உரமிக்க உடன்பிறப்புகளை ஓ... வெனக் கதறவிட்டு, தனது அண்ணனின் நிழலில் அவர் அமைதி காணச் சென்று ஆண்டுகள் ஆனது ஆறு.



எத்தனையோ அரசியல் மாற்றங்கள், சமூக ஏற்றங்கள் தமிழ்நாட்டில், ஏன்? இந்தியாவில் இந்த ஆறு ஆண்டுகளில் ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் ஆறாவது முறையாக நமது ஆட்சி! முதல்முறையாக நமது தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சர்! மத்தியில் தள்ளாடும் ஸ்திரமற்ற, பெரும்பான்மையற்ற பாசிச பா.ஜ.க. வின் ஆட்சி! தமிழகத்தில் எண்ணற்ற மக்கள் நல திட்டங்கள்! சாலைப் பணிகள்! பாலப்பணிகள்! வேலைவாய்ப்புகள்! நாளுக்கொரு நலத்திட்டம் என வெற்றி நடைபோடும் திராவிட மாடல் அரசு. இத்தனையும் காண அவரில்லை!

ஆனால் அவரின்றி, அவர் நினைவின்றி ஏதும் இங்கு நடப்பதில்லை!

அண்ணா எனும் அணையாவிளக்கின் ஒளி மங்காமல் எப்படி தலைவர் கலைஞர் காத்து வந்தாரோ, அதுபோல் கலைஞர் எனும் கலங்கரை விளக்கின் கம்பீரம் குறையாமல், ஏற்றி, போற்றிவருகிறார் நமது இனம் தழைக்க கொடையாய் வந்த தமிழினத்தளபதி அவர்கள்.

சாமானிய எளிய குடும்பத்தில் பிறந்து, சரித்திரத்தின் பொன்னேடுகளில் இடம் பெற்ற தலைவர் கலைஞர் அவர்கள் தான் ஏற்றுக் கொண்ட, வகுத்துக் கொண்ட கொள்கைகளுக்காக பட்ட ரணங்கள், கெட்ட நிகழ்வுகள், எண்ணிலடங்கா சோதனைகள், இதயத்தைப் பிழிந்த வேதனைகள் எத்தனை? எத்தனை?

“இந்தா விபீஷணா உனக்கு லங்காபுரி பட்டணம் என்றா அவருக்கு மகுடம் சூட்டப் பட்டது?”

**வழக்கறிஞர் வெ.அன்புவாணன்**
கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர்
தி.மு.க.



இருபது வயதிலேயே தந்தை பெரியாரின் இனமான, சுயமரியாதை, பகுத்தறிவு கர்ஜனைக் கேட்டும், அண்ணாவின் திராவிட நாடு இதழில் வெளிவந்த தனது இளமைபலி சிறுகதை மூலம் அறிமுகமான, அன்னைக்கு நிகராய் அன்பூட்டி, அரவணைத்து, அரசியல் சுவடுகளை அறிமுகம் தந்த அண்ணா தேர்தல் அரசியல் இல்லை என 1949 திராவிட முன்னேற்றக் கழகம் எனும் இயக்கம் கண்டபோதும், தனது 25 வயதில் அவரோடு இணைந்து பணியாற்றி, கலைத்துறையில் வெற்றிப் படிக்கட்டுகளில் விரைந்து முன்னேறிய காலந்தொட்டு, அவரது வளர்ச்சிக்கு உரமாக நின்றவர் ஒரு சிலரே!

ஏ அப்பா....

இப்படி பேசுகிறாரே! பேச்சு வாள்வீச்சாகவல்லவா இருக்கிறது! எழுத்தில் என்ன ஒரு சூடு? சுற்றி வளைத்து, சுயமரியாதை கருத்துகளை சூரணமாய் தருகிறார்.

பகுத்தறிவு கருத்துகளை பாலிடை கலந்த மெழுகுபோல் பாசாங்கு இல்லாத பைந்தமிழில் அரங்கேற்றுகிறாரே?

யார் இவருக்கு பதில் சொல்வது? என்று எதிரிகள் திகைத்து நிற்கும் நிலையை உருவாக்கியவர். அவரது ஆரம்ப அரசியல் மற்றும் கலைத்துறை பிரவேஷமே எதிரிகளுக்கு அக்கினி கணையாய் அவர்கள் இதயத்தை துளைத்தது.

சிலரை வளைத்தது. அந்த சிலர் திரை மற்றும் அரசியலில் எம். ஜி. ராம்சந்தர் எனும் எம். ஜி. ராமச்சந்திரன், விழுப்புரம் சின்னசாமி கணேசன் எனும் சிவாஜி கணேசன், முத்தையா எனும் கண்ணதாசன்.

இன்னும் கூட சொல்லலாம். இங்கு இடமில்லாமல் போகும்.

நாட்டையே கட்டியாளும் தேசிய கட்சியை எதிர்க்கிறோம். சதிகார ஆரியத்தின் வேரறுத்து, கிழித்து தொங்கவிடுகிறோம், காமராசரையே கொல்லத் துணிந்த வடவரின் வஞ்சகத்தை அம்பலப்படுத்தி அசிங்கப்படுத்துகிறோம்.

என்னாகுமோ?

புதுச்சேரியில் ஏற்கனவே கொலைவெறி தாக்குதல். குடும்பம் இருக்கிறது. மனைவி மக்கள் உடன் பிறந்தோர் நலன் தன் ஒருவனைச் சார்ந்ததே என்ற அச்சமெல்லாம் அவருக்கு இருந்ததில்லை.

இருந்திருந்தால் , அண்ணாவின் ஆணையேற்று, டால்மியாபுரம் எனும் இந்திப் பெயரை அழிக்கப்போனவர் தண்டவாளத்தில் தலைவைத்து படுத்திருப்பாரா?

ஆறுமாத கடுங்காவல் தண்டனை பெற்று அரியலூர் சிறையில் தான் அவதிப்பட்டிருப்பாரா??

அவருக்கு எதிர்ப்புகள் எதிர் முகாமிலிருந்து மட்டுமா?

உடன்பிறந்தே கொல்லும் வியாதி என்பது போல் இயக்கத்திலேயே இருந்திருக்கவில்லையா? இல்லாவிட்டால் 1962 ல் அண்ணா அவர்களால் கழகத்தின் பொதுச் செயலாளராக தனது 38 வயதிலேயே வந்திருப்பாரே!

அமைதியே உருவான அண்ணா, சலசலப்பு, சர்ச்சைகளை விரும்பாத அண்ணா, சில தவிர்க்க முடியாத சூழலிலும் தலைவர் கலைஞர் மீது விரும்பித் திணித்தது தானே கழகப் பொருளாளர் எனும் பொறுப்பு! அதுதானே விருகம்பாக்கம் மாநாட்டில் 11 லட்சத்தை அண்ணா வசம் ஒப்படைத்து, அவரை விழியகல ஆச்சரியப்படுத்தியது.

1967 ல் தனது 43 வயதில் மூன்றாவது முறையாக சைதாப்பேட்டையில் சட்டமன்ற உறுப்பினர். அண்ணா அமைச்சரவையில் பொதுப்பணித்துறை அமைச்சர்.

பேருந்துகள் நாட்டுடமை அவர் கையாண்ட விதம். பெரும் பஸ் முதலாளிகளெல்லாம் நாங்கள் பேருந்தை அரசிடம் ஒப்படைக்க மாட்டோம். இது எங்கள் சொத்து என்று எதிர்த்து நின்று குரல் கொடுத்தபோது சிறிதும் சளைக்காமல், “உண்மை தான். பேருந்து உங்கள் சொத்து தான். ஆனால் அவை எங்கள் சர்க்கார் சாலையில் பயணிக்க அனுமதி இல்லை” என்று அவர் போட்ட போட்டில் பஸ்கள் எல்லாம் உடனே பயணித்தது அரசு பேருந்து பணிமனைகளை நோக்கி......

எவ்வளவு பெரிய வல்லமை! ஆளுமை! நிர்வாகத்திறன்.

அண்ணாவின் மறைவிற்குப் பிறகு முதல்வரானார் என்றால், அதை அவர் ஏற்க மறுத்து, பலர் வற்புறுத்தி அவர் மேல் திணித்தது வரலாறு. 1970 கோடம்பாக்கத்தில் மறைந்த கே. ஏ. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் இந்த வரலாற்று உண்மையை ஊரறியச் சொன்னவர் அன்றைய கழகப் பொருளாளர் புரட்சிநடிகர் எம். ஜி. ஆர் அவர்கள். “ அண்ணாவின் மறைவிற்குப் பிறகு கலைஞர் தான் அந்த இடத்திற்கு தகுதியானவர் என்று தீர்மானித்து, நானும் ஆர்.எம். வீரப்பனும் கலைஞரின் கோபாலபுரம் இல்லம் சென்றோம். அங்கு அப்போது கலைஞர் இல்லை. தென்சென்னை எம்.பி. தம்பி முரசொலி மாறன் இருந்தார். நான் வந்ததின் நோக்கத்தை கேட்டு அவர், தயவுசெய்து மாமாவை விட்டு விடுங்கள் என்று உணர்ச்சி பொங்க குறிப்பிட்டார். “ என்று பேசியிருக்கிறார்.

முதல்வராக, கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்று கொண்ட தனது 45 வயதிலேயே மத்திய அரசியல் அரங்கில் தவிர்க்க முடியாத, சொல்லப்போனால் பிரதமர், குடியரசுத் தலைவர் எனும் இந்தியாவின் பெரும் தலைமை பதவிகளை தீர்மானிக்கும் சக்தியாக தனது அறிவுத்திறத்தால், அரசியல் நுட்பம் அறிந்த ராஜதந்திரத்தால் உயர்ந்து நின்றார்.

இன்னும் அவர் புகழ் சொல்ல ஏட்டில் இடமில்லை. நாளும் அவர் பெருமை பேசிக் கொண்டே இருக்கலாம்.

தன்னை வளர்த்த தலைவனை தனது இறுதி மூச்சு வரை ஐம்பதாண்டுகள் தூக்கிப்பிடித்த தலைவர் உலக அரங்கில் வேறெங்கும் காணமுடியாது.

அதேநேரம் அரசியல் சூதாட்ட சதுரங்கத்தில் 13 ஆண்டுகள் ஆட்சியிழந்து தொண்டர்களை துவளவிடாத தலைவராக, “உடன்பிறப்பே!” எனும் ஓரெழுத்து உயிர்ச்சொல்லில் தொண்டர்களுக்கும் திகட்டாத தலைவராக திகழ்ந்தவரும் நமது உயிரனைய தலைவர் கலைஞர் அவர்கள் மட்டுமே.

அந்தத் தலைவரின் 6 ம் ஆண்டு நினைவு தினம் ஆகஸ்ட் 7 அன்று சென்னையில் அமைதிப்பேரணிக்கு அழைக்கிறார், நமக்கு அண்ணாவாக, கலைஞராக காட்சி தரும், ஆட்சிதரும் மாட்சிமை மிகு தலைவர் தளபதியவர்கள்.

பிப்ரவரி 3 ல் அண்ணா அவர்கள் நினைவு தினத்தில் 1970 லிருந்தே அமைதிப் பேரணியில் நடந்துவந்து அஞ்சலி செலுத்திய தலைவர் கலைஞர் 90 களின் பிற்பகுதியில் வயது முதிர்வு காரணமாக வாகனங்களில் பேரணியில் கலந்து கொள்வார்.

2010 ல் அவர் முதலமைச்சர். பெரும் முதுகுவலி காரணமாக போரூர் ராமச்சந்திரா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர் பிப்ரவரி 3 அன்று எவரும் எதிர்பாராத வண்ணம் மருத்துவமனை ஊர்தியில் படுத்தபடியே வந்து தன்னை ஆளாக்கிய அண்ணனுக்கு அஞ்சலி செலுத்தினார் என்பது அவருக்குரிய புகழ்மிகுந்த வரலாறு.

அவரது அடிச்சுவட்டை அணுவளவும் மறக்காமல் ஆட்சி செய்யும் நமது முதல்வர் திராவிடப் பேரரசர் தளபதியவர்கள் அழைக்கிறார் தலைநகர் சென்னைக்கு! அமைதி பேரணி மூலம் தலைவர் கலைஞரின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திட!

“மந்திரி நமது மாநகர் தன்னில் மாதம் மும்மாரி மழைப் பொழிகிறதா?” என அந்த புரத்தில், அத்தாணி மண்டபத்தில் அமர்ந்து மக்கள் நலம் விசாரித்த அந்த கால பல அரசர்கள் போல் அல்லாமல், தலைமைச் செயலகத்திலிருந்து கூட தகவல் அறிய விரும்பாமல், தானே, அடைமழையால், கடும்புயலால் சிக்குண்டு அவதியுறும் மக்களை சகதியிலும், சாக்கடை, சாலை, குடிசைப் பகுதியிலும் குனிந்து சென்று மக்கள் பணியாற்றும் மனிதநேயர், மாண்பு மிகு முதல்வர் சென்னைக்கு அழைக்கிறார்.

இவற்றோடு அன்று மாலை அறிவாலயம் கலைஞர் அரங்கில் கலைஞர் 100 கவிதை 100 எனும் நூலும் கவிப்பேரரசு வைரமுத்து அவர்களால் தொகுக்கப்பட்டு, தலைமை இலக்கிய அணி பொருளாளர் ந. சந்திரபாபு அவர்களின் ஏற்பாட்டில் வெளியிடப்பட உள்ளது.

இது தலைவரின் ஆணையல்ல! அன்பான அழைப்பு! அனைவரும் தவறாமல் தலைவர் கலைஞரின் நினைவுகளைச் சுமந்த படி கலந்து கொள்வோம்.

காதில் ரீங்காரமிடுகிறது ஒரு கழகப் பாடல்! நாகூர் ஹனிபா அவர்களின் வெண்கலக் குரலில்;

“ எங்கே சென்றாய்? எங்கே சென்றாய்?
எங்களை ஏங்கவிட்டு,
எங்கே சென்றாய்? “





திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றியம், பச்சூர் ஊராட்சி, பாறையூர் புதிய அங்கன்வாடி கட்டிடத்தை திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. திறந்து வைத்து சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் குழந்தைகள் மேம்பாட்டு திட்ட அதிகாரி மாலினி, ஊராட்சிமன்ற தலைவர் தியாகராஜன், ஊராட்சி மன்ற துணை தலைவர் செல்விகிருஷ்ணன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் ராஜ்குமார், கிளைக் கழக செயலாளர்கள் கோவிந்தராஜ், இளவரசன், சக்தி, சென்னையன், அருள்குமார், சென்னகேசவன், முருகேசன், பாலு, ராஜேந்திரன், இளங்கோ மற்றும் அரசு துறை அதிகாரிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் 6 ஆம் ஆண்டு நினைவு தினம்!

## இராமநாதபுரம் மாவட்டம் முழுதும் புகழஞ்சலி செலுத்துவீர்!

### மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், எம்.எல். ஏ. வேண்டுகோள்!

*இராமநாதபுரம், ஆக. 6 -*

*முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர், அவர்களின் அறிவுறுத்தலின்படி நாளை (07.08.2024 - புதன்கிழமை) அன்று இராமநாதபுரம் மாவட்ட கழகம் சார்பில் அனைத்து கிளை, வார்டு கழகங்கள் தோறும் “புகழஞ்சலி” செலுத்தும் நிகழ்வு நடைபெற உள்ளது.*

*ஆகவே மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளை கழக, வார்டு கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட கழக தோழர்கள் அனைவரும் அவரவர் எல்லைக்குட்பட்ட கிளை, வார்டு கழகங்கள் தோறும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி புகழஞ்சலி செலுத்திடுமாறு கேட்டு கொள்கிறேன்.*



*இவ்வாறு மாவட்டக் கழக செயலாளர், காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.*



இராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி பகுதியில் பல்வேறு ஊராட்சிகளைச் சேர்ந்த S.D.P.I கட்சியின் இளைஞர் நிர்வாகிகள் பலர் தமிழ்நாட்டில் நடந்து வரும் பொற்கால ஆட்சியின் சாதனையை வியந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையை ஏற்று இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தஞ்சை ஏ.வி. பதி
### ஆகஸ்ட் 6 (1996)



தஞ்சை மாவட்டக் கழக முன்னணித் தோழர்களில் ஒருவர். தஞ்சை நகர்மன்ற உறுப்பினர், நகர்மன்றத் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.

கழகம் தொடங்கிய நாள் முதல் தன்னை முழுமையாக கழகப் பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டவர்.

அறிஞர் அண்ணா அவர்களால் துவக்கப்பட்ட சீரணிப் படையில் தஞ்சை வட்டத் தலைவராக பொதுப்பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் – மன்னை ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.

கழகம் நடத்திய அறப்போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி ஏ.கே.மோட்டூர் ஊராட்சி, அண்ணாநகர் பகுதியில் ரூ.14.31 இலட்சம் மதிப்பீட்டில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் புதியதாக கட்டப்பட்ட அங்கன்வாடி மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்பகராஜ் தலைமையில், ஏ.நல்லதம்பி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் வட்டார குழந்தைகள் வளர்ச்சி திட்ட ஒருங்கிணைப்பாளர்.திருமதி.செல்வி, திருப்பத்தூர் ஒன்றியக்குழு தலைவர்.விஜயாஅருணாசலம், ஒன்றிய கவுன்சிலர்.எம்.ஜி.காந்தி, அ. அன்பழகன், ஆவின் இயக்குனர்.சின்னபையன், எஸ்.சி.விஜயகுமார், து.அ.சிவப்பிரகாசம், குமரேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

89வது வட்டத்தில்

## ‘வருமுன் காப்போம்’ திட்ட ஏற்பாடுகள்!

### எம்.இ.சேகர் ஆய்வு!

*சென்னை, ஆக. 6 -*

*சென்னை மாநகர் முழுவதும் வருமுன் காப்போம் நோய் தடுப்பு நடவடிக்கைகளை சென்னை மாநகராட்சி மேற்கொண்டு, ஆங்காங்கு கொசு மருந்து அடிப்பது உள்ளிட்ட சுகாதாரப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.*

*89வது வார்டுக்கு உட்பட்ட கலெக்டர் நகரில் உள்ள அனைத்து தெருக்களிலும் வருமுன் காப்போம் நோய் தடுப்பு நடவடிக்கையாக சுகாதார பணி கொசு மருந்து அடிக்கும் பணியை வட்டக் கழகச் செயலாளரும் மாமன்ற உறுப்பினருமாகிய எம்.இ.சேகர் நேரில் ஆய்வு செய்தார். உடன் வட்டக் கழக நிர்வாகிகள், ஏ.எல்.ஓ. மலேரியா பணியாளர்கள் கலந்து கொண்டனர்.*